# MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal

முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME – III ISSUE - I

AUG -2025 E-ISSN : 2584 – 1238


## திருக்குறள் - இல்லற ஆளுமை


**முனைவர் து.சிவசித்ரா,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை(சுயநிதி),

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,பசுமலை, மதுரை.

9952725757, sivachitrad1975@gmail.com



DOI 10.5281/zenodo.16434192.



**Abstract :**

The society at the time of the emergence of Thirukkural can be described as a society defined by the principle of morality. Because this book has classified the good and bad of life and formulated and compiled the norms of life that were acceptable to many people in the society, especially the learned, the wealthy, the upper class, and the farmers. Following this, we can consider the many moral books that appeared during this period that presented the methods related to morality as socially acceptable morals, behaviors, and justice.The moral rules presented by the Hindus are mostly acceptable. However, some ideas create problems in thinking about social personality. For example, the character of those born in good families is traditionally cultivated, women are denied the freedom to go beyond the home, and there is a contradiction in the definition of manhood. The places where Thiruvalluvar speaks about insisting on acting according to the rules, pointing out the inequalities found in birth, education, etc., and the nature of the king's nobility, are worth thinking about. Because of these, sometimes it becomes inevitable to find a compromise in human personality. Therefore, Valluvar says that a person can make himself flexible from a tight position as appropriate to the environment to establish his personality. This can be called personality compromise.

It can be beneficial for others. A wealthy person who cannot give cannot recover from poverty. Even though Valluvar makes such sweeping statements, he should live in harmony with the personality of a wealthy person. He should live by giving, and even when he becomes poor, he should not change his condition and should not expect anything, but should live by giving what he has. He puts forward his own characteristics of living with love and simplicity. A wealthy person who behaves arrogantly and is arrogant in appearance and behavior is considered unworthy by identifying him as one who has received wealth in gratitude. Therefore, the personality of a wealthy person lies in his good will, generosity and generosity. A person who controls wealth is called a wealthy person. Even if a person does not have such abilities, it is not considered wealth. Valluvar's views reveal that any education, knowledge, wealth and morality. that is not beneficial to the people are wasted.Children raised with joy and love by their parents later earn a good name for their parents who educate them and teach them the intricacies of life. The best quality of a parent is to bring joy to their children. The good news that their children are admired or praised by others in the world is what brings joy to their parents.



Key Words : morality - Praised - intricacies - generosity - arrogant - poverty - nobility - inequalities





http://Creativecommons.org//license/by/4.0/.

திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்த சமூகத்தை அறக்கொள்கையால் வரையறுக்கப்பட்ட சமூகம் எனக் குறிப்பிடலாம். ஏனெனில் இந்நூல் வாழ்வின் நன்மை, தீமைகளை இனம்பிரித்துக் காட்டிச் சமூகத்தவரில் குறிப்பாகக் கற்றறிந்தோர், செல்வந்தர், உயர்குடி மக்கள், விவசாயிகள் எனப் பலரும் ஏற்கும்படியான வாழ்க்கை நெறிமுறைகளை, வகுத்தும் தொகுத்தும் கூறியிருக்கிறது. இதனைத் தொடர்ந்து அறம் தொடர்பான வழிமுறைகளையே சமூகத் தகுதி வாய்ந்த ஒழுக்கங்களாகவும் நடத்தைகளாகவும் நீதிமுறைகளாகவும் எடுத்துக்கூறிய பல அறநூல்கள் இக்காலக்கட்டத்தில் தோன்றியதை எண்ணிப் பார்க்கலாம்.

இந்நூல்கள் முன்வைத்த ஒழுக்கவிதிகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கனவாகவே உள்ளன. எனினும் ஒருசில கருத்துக்கள் சமூக ஆளுமை குறித்த சிந்தனையில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. சான்றாக, நற்குடிப்பிறந்தோரது பண்பு மரபுவழியாகப் பண்பட்டதாகவே இருக்கும் என்பதையும் பெண்களுக்கு இல்லத்தைத் தாண்டிச் செல்வதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டிருப்பதையும் ஆடவரின் ஆண்மை குறித்த வரையறையில் முரண்பாடு இருப்பதையும். குழலுக்கேற்ப நடந்துகொள்ள வலியுறுத்துவதையும், பிறப்பு, கல்வி முதலானவற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் சுட்டப்படுவதையும், அரசனின் அறிவாண்மையில் இருவேறு தன்மைகள் இருக்கவேண்டிய இயல்பையும் தரித்துத் திருவள்ளுவர் பேசும் இடங்கள் சிந்திக்கத்தக்கன. இவற்றால் மனித ஆளுமையில் சிலவேளை சமரசம் காணவேண்டியது தவிர்க்கமுடியாததாகிறது. எனவே ஒருமனிதன் தனது ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்வதற்குச் சூழலுக்குத் தகுந்தவாறு இறுக்கமான நிலையிலிருந்து நெகிழ்வாக்கிக் கொள்ளலாம் என்கிறார் வள்ளுவர். இதனை ஆளுமைச் சமரசம் எனலாம்.

பிறரால் பயன்விளையக் கூடும். ஈயாத செல்வந்தன் வறுமை வந்த போது அதிலிருந்து மீளமுடியாது. இவை போல் நிரம்பக் கருத்துக்களை வள்ளுவர் கூறினாலும் செல்வந்தரின் ஆளுமைப்பண்பாக அவர் இசைபட வாழவேண்டும். கொடுத்து வாழவேண்டும், தமக்கு வறிய நிலை வந்த போதும் தன்நிலை மாறாது எதனையும் எதிர்பாராது, இருப்பதைக் கொடுத்து வாழவேண்டும். அன்புடனும் எளிமையாகவும் வாழவேண்டும் என்கிற அவர்தம் பண்புகளை முன்னணிப்படுத்துகிறார். உருவத்தாலும் நடத்தையாலும் மிடுக்காக ஆணவத்துடன் நடந்து கொள்கிற செல்வந்தரை நன்றிஇல் செல்வத்தைப் பெற்றவர் என்று இனங்காட்டி அவரைத் தகுதிக்குறைவுடையவர் என்கிறார். எனவே செல்வந்தர் ஆளுமை என்பது அவர்தம் நற்சிந்தையிலும் பெருந்தன்மையிலும் கொடைத்திறத்திலும் அடங்கியிருக்கிறது. செல்வத்தை ஆளுகின்ற பண்பாளனே செல்வந்தன் எனப்படுகிறான். அத்திறம் இல்லாதவனிடத்தே செல்வம் இருந்தாலும் அது செல்வமாகக் கருதப்படாது. மக்களின் பயனுக்குதவாத எந்தக் கல்வியும், அறிவும், செல்வமும், வீரமும் வீணானவை என்றே வள்ளுவரின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

பெற்றோர்கள் மகிழ்வுடனும் அன்புடனும் வளர்த்த பிள்ளைகள் பிற்காலத்தில் தமக்குக் கல்விதந்தும் வாழ்க்கையின் நுட்பத்தை விளக்கியும் ஆளாக்கிய பெற்றோர்களுக்கு நற்பெயரை


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

வாங்கித்தருவதே அவர்தம் சிறந்த பண்பாகும். தம் மக்கள் உலகத்துப் பிறரால் போற்றப்படுகிற அல்லது புகழப்படுகிற இனிய செய்தியே பெற்றோருக்கு இனிமை சேர்ப்பதாகும்.

**முன்னுரை**

திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்த சமூகத்தை அறக்கொள்கையால் வரையறுக்கப்பட்ட சமூகம் எனக் குறிப்பிடலாம். ஏனெனில் இந்நூல் வாழ்வின் நன்மை, தீமைகளை இனம்பிரித்துக் காட்டிச் சமூகத்தவரில் குறிப்பாகக் கற்றறிந்தோர், செல்வந்தர், உயர்குடி மக்கள், விவசாயிகள் எனப் பலரும் ஏற்கும்படியான வாழ்க்கை நெறிமுறைகளை, வகுத்தும் தொகுத்தும் கூறியிருக்கிறது. இதனைத் தொடர்ந்து அறம் தொடர்பான வழிமுறைகளையே சமூகத் தகுதி வாய்ந்த ஒழுக்கங்களாகவும் நடத்தைகளாகவும் நீதிமுறைகளாகவும் எடுத்துக்கூறிய பல கருத்துக்களை இக்கட்டுரை வாயிலாக காணலாம்.

**குடும்பத் தலைவன், தலைவியர் ஆளுமை**

திருவள்ளுவர் ஒருவன், ஒருத்தியாக (கணவன் மனைவியாக) வாழ்கின்ற இல்லறத்தைப் போற்றுகிறார். திருமணம் முடித்த பின் ஆண், பெண் மேற்கொள்கிற குடும்ப வாழ்க்கையை உயர்ந்த வாழ்க்கையாகச் சித்திரிக்கிறார். குடும்ப வாழ்வில் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்து அறிவுடனும் அன்புடனும் பண்புடனும் வாழவேண்டும் என்கிறார். அதுவே குடும்ப அறத்தின் அடிப்படை என்றும் கூறுகிறார். மேலும் கணவன், மனைவி, குழந்தைகள் எனக் குடும்ப உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைக் கூறி அவற்றின் வழி அவர்களுக்குரிய ஆளுமைப் பண்பினை வரையறுக்கிறார்.

மணம் முடித்த ஆடவனே குடும்பத்தின் தலைவனாக விளங்குகிறான். இவன் குடும்பப் பொறுப்பை ஏற்றவுடன், பல இன்ப, துன்பங்களைச் சந்திப்பவனாகிறான். மனைவி, மக்கள், உறவினர், சுற்றத்தார், நண்பர், ஆசிரியர், ஞானியர், துறவியர், ஆதரவற்றோர் எனப் பலரோடும் உறவு கொண்டு வாழ வேண்டியவனாகிறான். இதனால் சமூகத்தவர் பலராலும் போற்றக்கூடிய வகையில் வாழவேண்டிய கடப்பாடு குடும்பத் தலைவனுக்கு இருக்கிறது. குடும்பத் தலைவனுக்குரிய பொதுவான பண்புகளை வள்ளுவர் வழிக் காணலாம்.

குடும்பம் அல்லது இல்வாழ்க்கையைப் பின்பற்றிக் குடும்பத் தலைவனாக அறியப்படுபவன் தனது குடும்பத்தவருக்கும் மேற்சுட்டிய மனிதருக்கும் துணை நிற்பவனாக விளங்கவேண்டும். அவன் வணிகனாகவோ, வேளாண் தொழில் செய்பவனாகவோ அல்லது பிற தொழில் செய்பவனாகவோ இருந்தாலும் பிறர் பழிச்சொல் சொல்லாத அளவிற்குப் பொருள் ஈட்டவேண்டும். அப்பொருளால் பிறருக்குப் பயன் உண்டாயின் அதனை அவருக்குக் கொடுத்து வாழவேண்டும். பொருள் இழந்தவர், வாழ வழியற்றவர், கைவிடப்பட்டவர், அனாதையர், உலகப் பற்றறுத்த துறவியர் என்று எத்தனையோ


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

மனிதர்கள் ஆதரவும் அரவணைப்புமின்றி இருப்பது இவ்உலகத்து இயல்பு. இவர்களுக்கு உரிய நன்மைகளைச் செய்து அதனால் பெருமை அடைய வேண்டும். இதன் காரணமாகவே இல்வாழ்வான் என்பான் புலன்களை அடக்கி உலக வாழ்வை விட்டொழித்த மனிதருள்ளும் மிகச் சிறந்த முயற்சியாளன் என்று வள்ளுவரால் பாராட்டப்படுகிறான். ஏனெனில் பழிச்சொல் இல்லாது வாழ்வதும், தொழில் புரிவதும், பிறருக்காக உதவுவதும் எனக் கடமையாற்றும் பல வழிகளிலும் வரப்பெறும் இடர்ப்பாடுகளைப் பொறுத்துத் தவம் செய்வார்போல் இல்வாழ்வின் கடமைகளை நிறைவேற்றுபவன் சிறந்த ஆளுமைமிக்கவன் ஆவான். தன் பொருள், தன் குடும்பம், தன் பிள்ளைகள் எனத் தன்னலம் பாராட்டிச் சமூகப் பிறமனிதர்களோடு உறவை அறுத்துக் கொள்பவன் இல்வாழ்வான் ஆகமாட்டான். வள்ளுவர் கூற்றுப்படி இல்வாழ்க்கைக்கென்று ஒரு அறநெறி உள்ளது. அதனைப் பின்பற்றி நடவாதவன் குடும்ப வாழ்க்கையைப் பின்பற்றுபவன் என்று கூற இயலாது. அவர்கள் உலகத்திற்குப் பாரமானவர் என்று கூறப்படுகிற மனிதரோடு வைத்து எண்ணத்தக்கவர். அத்தகையோர் குடும்பம் நல்லோர் மனத்தில் நிலைபெறாமல் அல்லது கவனிக்கப் பெறாமல் போய்விடும். இதனால்தான் வள்ளுவர் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்கிறார். இல்வாழ்வில் பண்பு, அன்பு, குணம், பொறுமை, அடக்கம் எனப் பல்வேறு ஒழுக்கங்களுக்கும், நடத்தைகளுக்கும் இடமிருப்பதால் வீடு, ஒட்டுமொத்த 'அறன்' பிறப்பதற்கான களமாகவே திகழ்கிறது. இவற்றை அறிந்து பிறர் பழிகூறாத வண்ணம் குடும்ப ஒழுக்கம் பேணுகிறவரை குடும்பத்தவருள் சிறந்தவர் அல்லது ஆளுமையுடையவர் எனலாம்.

குடும்பத்தலைவன் பின்பற்ற வேண்டிய மிகமுக்கியமான ஒழுக்கநெறி என்பது பிறரது மனைவியர் மீது காதல் விருப்பம் கொள்ளாதிருப்பதாகும். 'பிறன்மனை நோக்காத பேராண்மை' (கு.எ.148) என்று இத்தகைய குணத்தோரை வள்ளுவர் சிறப்பித்துக் கூறுகிறார். பிறன்மனை நயத்தல் என்கிற குற்றம் குடும்ப அறத்தைக் கெடுப்பதோடல்லாமல் வழிவழியாக அக்குடும்பத்து வருங்காலத் தலைமுறையினருக்கும் பெரும் பழியைக் கொண்டுவந்து சேர்க்கும் என்று வள்ளுவர் குறிப்பிடுவது இக்குற்றத்தின் கொடுமையை விளக்கி நிற்கும். எனவே உடல் இச்சையை அடக்கி அதனை வெல்பவனாகவும் குடும்பத்தலைவன் விளங்க வேண்டும்.

ஒருவன் சிறந்த ஒழுக்கமுடையவனாகவும், நடத்தையில் சிறந்தவனாகவும் இருந்தாலும் வறுமை அல்லது இடர்ப்பாடுகள் பலவற்றைச் சந்திக்க நேரிடும் சூழலில் அவன் துன்பத்திற்கு ஆளாக வேண்டி வரும் என்ற உலக இயற்கையையும் வள்ளுவர் கணக்கில் கொள்கிறார். இதற்குக் குடிசெயல் வகை, குடிமை போன்ற அதிகாரங்களில் குடும்பத்தைக் காக்க வேண்டியவன் செய்ய வேண்டிய கடமைகளைப் பட்டியலிடுகிறார்.

**"வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**

**பண்பின் தலைப்பிரிதல் இன்று"** (கு.எ. 955)

என ஒருவன் தொன்றுதொட்டு இல்லறக் கடமைகளை ஆற்றி வந்தது ஒருக்கால் தாழ்வுற்றாலும்



http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

அவன்தன் குடும்பப் பண்பினை விடாமல் பாதுகாப்பது என்பது தாழ்வுறாது. அது அவர்தம் மனத்தில், குடும்பத்தில் வழிவழியாய் நிலைத்து நிற்கும் என்ற கருத்தையும்,

**"இடும்பைக்கே கொள் கலங்கொல்லோ குடும்பத்தைக்**

**குற்றம் மறைப்பான் உடம்பு" (கு.எ.1029)**

எனக் குடும்பத்திற்கு வரக்கூடிய எண்ணிறைந்த துன்பங்களையும் தாங்கித் தனது குடும்பமதிப்பைக் காப்பதற்காகவே குடும்பத்தலைவன் பெற்ற உடம்பு இருக்கிறது என்ற கருத்தையும் கூறுகிறார். அது மட்டுமின்றி சிலவேளை நல்ல ஆண்மகன் பிறவாத காரணத்தால் குடும்பம் வீழ்ந்துபடுவதுமுண்டு. அதேவேளை 'குடி செய்வல்' என்று குடும்பத்தை நிலைநிறுத்த முயல்கிற ஆண்மகனும் உண்டு. இவ்வேறுபாடுகளையும் சுட்டிக் குடும்பம் காலாகாலத்திற்கும் மரபு வழியாகச் சிறப்புமிக்க அல்லது ஆளுமைமிக்க குடும்பமாகத் தொடர்வதற்கு வள்ளுவர் விரும்புகிறார். அதனாலேயே குடும்பம் வீழ்ந்துவிடாத வகையில்,

**"ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்**

**நீள் வினையான் நீளுங்குடி" (கு.எ.1022)**

என்று குடும்பத்தலைவனால் காக்கப் பெறவேண்டிய சிறப்பான அறிவு, விடாமுயற்சி குறித்த கருத்தையும் முன்வைக்கிறார்.

மேற்கூறியவற்றால் குடும்பத் தலைவன் என்பவன் தனது குடும்பத்தைப் பாரம்பரியம் மிக்க குடும்பமாகவும் தகுதியால் குறைவுபடாத வகையில் வழிவழியாக நல்ல பிள்ளைகளைப் பெற்று வளர்த்தெடுத்துச் செல்வதற்குரிய குடும்பவித்தாகவும் விளங்க வேண்டும் என்பது புலனாகும். இதனால் குடும்பத்தலைவனின் ஆளுமை குடும்பத்தின் நிலைத்த புகழில் தொடர்கிறது எனலாம்.

பிறர் பழிக்கும்படி இல்லாமல் புகழ்மிக்க தகுதியோடு ஒரு குடும்பத்தை ஆடவனால் மட்டும் உருவாக்கிட இயலாது. அவனுக்கு உறுதுணையாக அவனது மனைவியும் செயலாற்ற வேண்டும். எனவே குடும்பம் என்பது கணவன், மனைவி ஆகிய இருவரது ஒருமித்த செயல்பாட்டினால் வழிவழித் தொடரும் நிலைபேறுடையதாகிறது.

ஒரு பெண் ஒரு ஆடவனுக்கு மனைவியாகிய பின் தனது நடத்தைகளில் உயர்வுடைய பண்பினை வளர்த்தெடுக்க வேண்டும். முதலில் கணவனைத் தெய்வம் என்ற நிலையில் வைத்து வணங்கியும், அடங்கியும் நடத்தல் வேண்டும். தன்னைப் பாதுகாப்பவனும் தனது வாழ்வின் இறுதிவரை தொடர்ந்து வரக்கூடியவனான கணவனை நம்பித் தொழ வேண்டும். இங்கே கணவன், மனைவியருக்கு இடையிலான ஆத்மார்த்தமான உறவையே வள்ளுவர் வேண்டுகிறார்.

இல்லாள் என்பவள் நற்குணங்களும் நன்னடத்தைகளும் நிரம்பப் பெற்ற மாண்புடையவள்


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

ஆவாள். அவள் கணவனுக்கு உற்ற துணைவியாக இருக்கவேண்டும். இங்கே கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் கணவனும் பண்பால் சிறந்தவனாயிருத்தல் வேண்டும் என்பதேயாகும். கணவனுக்குத் துணைநிற்க வேண்டுமென்பதால் அவனது தீயநடவடிக்கைகளுக்கெல்லாம் மனைவி துணைபோதல் ஆகாது. எனவே குடும்பஅறம் என்பதில் கணவன், மனைவி ஆகிய இருவரும் தம்மளவில் மாண்புடையவர்களாக இருத்தல் வேண்டும். அது அன்பு, பண்பு, அருள் என்கிற பல நற்பண்புகளை உள்ளடக்கியது. இதனையே 'மனைமாட்சி' என்று வள்ளுவர் போற்றுகிறார்.

ஏனைய செல்வச்சிறப்பு, கல்விச்செருக்கு, கொள்கைப் பிதற்றல் போன்றவற்றையும் அவற்றின் மூலம் வரப்பெறும் மகிழ்வையும் சிறப்பானதன்று என்று வள்ளுவர் வரையறுக்கிறார். மனைக்குரிய நல்அறங்களோடு கணவன், மனைவி இணைந்த குடும்ப வாழ்க்கை என்பது மாட்சிமை கொண்டதாக இருக்க வேண்டும். அதுவே குடும்ப அறம், குடும்ப வாழ்வின் அடிப்படையுமாகும்.

மனைவியானவள் எந்நிலையிலும் மனங்கலங்காதவளாக இருத்தல் வேண்டும். கணவனுக்குப் பெருமைதேடித் தருதல் வேண்டும். உடலாலும் உள்ளத்தாலும் தனது கற்பினை நிறையாகக் காத்துக் கொளல் வேண்டும். அப்பண்பு பெண்களுக்கே பெருமை சேர்ப்பதாகும். 'உயிரினும் மானம் பெரிதென' வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். கணவனின் குடும்ப வளத்திற்கேற்ப இயைந்தும் புரிந்தும் வாழப்பழகுகிற அறிவும் வேண்டும். இத்தகைய பண்புகள் உள்ள பெண் அல்லது குடும்பத் தலைவி போற்றப்படுவாள். அவள் தகுதியால் உயர்ந்தவளாவாள்.

தகுதியால் உயரிய மதிப்புடைய இல்லாள் குடும்பத்திற்குப் பெருமை சேர்ப்பவள் மட்டுமல்ல. அவள் கணவனைச் சிங்கம்போல் உயர்த்துபவளும் ஆவாள். கணவனின் இம்மைப் புகழ் என்பது மனைவியாலும் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. இது ஒருவகையில் பெண்களை நெறிப்படுத்துவது மட்டுமின்றி அத்தகைய பண்புள்ள மகளைத் திருமணம் முடிக்க வேண்டுமென்று ஆணுக்கு வழி கூறுவதாகவும் உள்ளது. சிறந்த ஆடவரைக் கணவனாக அடைய எண்ணும் பெண்ணுக்கும் இது பொருந்தும். குடும்பஅறம் காத்தற்கு கணவன், மனைவி இருவரும் நன்னடத்தை உடையவராய் இருத்தல் மிகவும் தேவை.

மாண்புடையவர்களாக வாழ்வது இல்லாளுக்குப் புகழ் சேர்க்கும் என்றாலும் அவள் நன்மக்களையும் பெற்று வளர்த்தால் அது அணிக்கு அணி சேர்ப்பது போன்றது. நல்ல கணவன், நல்ல மனைவி, நல்ல பிள்ளை இவர்களால் நல்ல குடும்பம், நல்ல சமூகம் என்று தனிமனிதரில் தொடங்கி சமூகம்-உலகம் என்று திருவள்ளுவர் ஆளுமைமிக்க மனிதஉலகினைப் படைக்க முயல்வதை எண்ணிப் பார்க்கலாம்.

**பெற்றோரும் குழந்தைகளும்**

கணவன், மனைவியர் குழந்தைகளைப் பெற்றவுடன் அவர்கள் தாய், தந்தையர் நிலைக்கு


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

உயர்கிறார்கள். குழந்தைகளிடம் அவர்கள் எங்ஙனம் உறவாட வேண்டும் என்பதையும் வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார். குழந்தைகளிடம் நெருங்கிப் பழக வேண்டும். அவர்கள் பேசுவதைக் கேட்டு மகிழ வேண்டும். மக்களின் மழலைச் சொல் யாழிசையிலும் இனிது. அவர்கள் எச்சில்படுத்திய கஞ்சி அமிர்தம் போன்றது. அவர்களோடு ஒட்டி உறவாட வேண்டும்.

**"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்**

**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" (கு.எ.65)**

என்றெல்லாம் குழந்தைகளால் பெறப்படும் இனிமையைக் கூறி சிறுபிள்ளைகளிடத்துப் பெற்றோர் நடந்துகொள்ள வேண்டிய வழிமுறையை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

தமது பிள்ளைகளிடம் கடுமையாக நடந்து கொள்வதும் அவர்களது கருத்தைக் காது கொடுத்துக் கேட்காமல் தவிர்ப்பதும் குழந்தை தொட்ட பண்டங்களை அருவருப்பாய் நோக்குவதும், அவர்களை அருகே நெருங்க விடாமல் பார்த்துக் கொள்வதும் பெற்றோர்க்குச் சிறந்த பண்பாகாது. எனவே பிள்ளைகளோடு ஒட்டி உறவாடி மகிழ்கிற, குழந்தையை இன்பமாய்க் கருதி வாழ்கிற, அவர்களுக்குத் தமது புறத்துறுப்பையும் அகத்துறுப்பையும் தந்து உதவுகிற பெற்றோர்களே ஆளுமை மிக்கவராவர்.

பெற்றோர்கள் மகிழ்வுடனும் அன்புடனும் வளர்த்த பிள்ளைகள் பிற்காலத்தில் தமக்குக் கல்விதந்தும் வாழ்க்கையின் நுட்பத்தை விளக்கியும் ஆளாக்கிய பெற்றோர்களுக்கு நற்பெயரை வாங்கித்தருவதே அவர்தம் சிறந்த பண்பாகும். தம் மக்கள் உலகத்துப் பிறரால் போற்றப்படுகிற அல்லது புகழப்படுகிற இனிய செய்தியே பெற்றோருக்கு இனிமை சேர்ப்பதாகும்.

## துணைநூற்பட்டியல்

**முதன்மை ஆதாரம்**

1. பரிமேலழகர்., திருக்குறள் பரிமேலழகர் உரை, ராம் பிரசுரம், சென்னை. முதற்பதிப்பு, டிசம்பர் 2003.

**துணைமைச் சான்றாதாரங்கள்**

2. அகமுடைநம்பி, க.சி., (ப.ஆ), திருக்குறளில் பெண்ணியம், கருத்தரங்கம்-ஆய்வுக்கட்டுரைகள், மீனாட்சி புத்தக நிலையம், முதற்பதிப்பு, 2006.
3. அருண் சுப்பிரமணியம், (தொ.ஆ), இலக்கணமும் ஆளுமைகளும், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி. முதற்பதிப்பு, 2007.
4. அருணாசலம், குறளின் செய்தி, பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு. 1968.
5. அருணை வடிவேலு முதலியார்,சி., தெய்வப் பனுவல்களில் திருக்குறள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், முதற்பதிப்பு. 1992.


http://Creativecommons.org//license/by/4.0/.

6. அழகரடிகள், தவத்திரு., திருக்குறள் அறம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1970.

7. பரிமேலழகர், (உ.ஆ.), திருக்குறள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1967.

8. புலியூர்க்கேசிகன், (ப.ஆ.), திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னைன-8. ஏழாம் பதிப்பு, 2004.



http://Creativecommons.org//license/by/4.0/.